வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 160 of 2014

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சுகன்யா | தொழில் | : | இல்லதரசி |
| கணவர் பெயர் | : | சுபுகுமார் | வயது | : | |
| கிராமம் | : | ராயர்புரம் | | | |
| தாலுக்கா | : | திருப்பூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24.06.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 24.06.2025.**

1) நான் தற்போது திருப்பூர் ராயர்புரத்தில் குடியிருந்து கொண்டு வருகிறேன். சம்பவ காவலத்தில் பல்லடம் மங்கலம் ரோட்டில் உள்ள மணப்புரம் பைனான்சில் உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2009 ஆம் வருடம் நான் அங்கு வேலை செய்தேன். மேற்படி மணப்புரம் பைனான்சில் கிளை தலைமை அலுவலராக ரம்யா என்பவரும், அவரது உதவியாளராக கணேசன் என்பவரும் பணிபுரிந்து வந்தார்கள். மணப்புரம் கோல்டு பைானன்சில் கேராள திருச்சூரிலிருந்து மாதம் மாதம் கணக்கு சரிபார்ப்பதற்காக வருவார்கள். அப்போது ஹரிசந்திரன் என்பவர் கணக்கை சரிபார்த்து இருப்பு எவ்வளவு உள்ளது என்பதை பார்ப்பதற்காக வந்து இருந்தார். அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த தங்க நகைகள் காணாமல் போயிருப்பதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக 01.11.2009 ஆம் தேதி ஹரிசந்திரன் போலீசில் புகார் கொடுத்தார். நகை காணாமல்போன காலக்கட்டத்தில் எதிரிகள் இருவரும் தான் பணியில் இருந்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

2) என்னை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 01.11.2009 ஆம் தேதி ஆகும். அந்த தேதிக்கு முன்பு எவ்வளவு காலம் மணப்புரம் கோல்டு நிறுவனத்தில் பணியிலிருந்தேன் என்றால் 5 மாதம் ஆகும். யார் என்னை விசாரித்தார் என்றால் பெயர்

தெரியாது. எந்த காவல் நிலையத்தை சேர்ந்த எந்த அதிகாரி என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கேரளா திருச்சூரைச்சேர்ந்த ஹரிசந்திரன் தான் மாதம் மாதம் ஆடிட்டிங் செய்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வாக்குமூலத்தை சாட்சியம் கொடுத்து சாட்சி வாக்குமூலத்தை படித்து பார்த்து மேற்படி விபரம் இல்லை என்று சொல்கிறார். நான் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் பைனான்சில் பல்லடம் காவல் நிலைய அதிகாரி யாரும் வந்து எங்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றும், நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.06.24 15:50:14 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 160 of 2014

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.திருமலைசாமி | தொழில் | : | பவர் லூம் தொழில் |
| தந்தை பெயர் | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | ரங்கசமுத்திரம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24.06.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 24.06.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பவர் லூம் தொழில் செய்து வருகிறேன். கடந்த 10.09.2009 ஆம் தேதி மணப்புரம் பேங்கில் ஒரு ஜோடி வளையல் அடகு வைத்தேன். அதன் எடை 20.1 கிராம் ஆகும். நகையை அடகு வைத்து ரூ.18,000/- பணம் கொடுத்தார்கள். பிறகு 01.11.2009 ஆம் தேதி மணப்புரம் பேங்கிலிருந்து எனக்கு போன் செய்து நகையை அடகு வைத்தது குறித்து கேட்கவேண்டும் என்று வரச்சொன்னார்கள். நான் சென்றேன். அங்கு போய் விசாரித்தபோது மணப்புரம் கோல்டு பைனான்சில் மாதம் மாதம் ஆடிட்டிங் செய்வார்கள் என்றும், அதில் நான் அடகு வைத்த நகையை காணவில்லை என்றும் சொன்னார்கள். இது சம்மந்தமாக ஆடிட்டிங் செய்த ஹரிசந்திரன் என்பவர் போலீசில் புகார் கொடுத்ததாக சொன்னார்.

2) தற்போது என்னிடம் காட்டப்படும் பேங்க் லோன் படிவத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த படிவம் நான் நகையை அடகு வைத்து ரூ.18,000/- பணம் பெற்றதற்கான படிவம் ஆகும். அந்த **படிவம் அ.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) பேங்கிலிருந்து எனக்கு யார் போன் செய்து கூப்பிட்டது என்றால் ஞாபகம் இல்லை. அடகு வைத்தது சம்மந்தமாக யார், எந்த காவல் அதிகாரி எப்போது விசாரித்தார் என்றால்

ஞாபகம் இல்லை. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பேங்கில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்தபோது வேறு நபர்கள் யாரும் உடனிருந்தார்களா என்றால் இல்லை. நான் மட்டும் தான் இருந்தேன். விசாரணையின்போது அ.சா.ஆ.1 ஆவணத்தின் பற்றி சொன்னேனா என்றால் போலீசார் விசாரணை செய்தார்கள். விசாரணையின்போது என்னிடமிருந்து நான் ஆவணவம் எதுவும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2025.06.24 15:50:19 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.